DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 221/2022

List of Witness : Lw3

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அழகர்சாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ராமசாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :– 10/04/2026

(3வது எதிரி ஆஜர் இல்லை. 3வது எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1 மற்றும் 2 எதிரிகள் காணொலி மூலம் ஆஜர்ப்படுத்தப்பட்டார்கள்.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் ஜவ்வாதுப்பட்டியில் பண்டையார் தோட்டத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். மேலும் ஜவ்வாதுப்பட்டி பஞ்சாயத்தில் வாட்டர் மேனாக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 பழனிவேல் என்வரை எனக்கு தெரியும். அவர் ஊர் பஞ்சாயத்து தலைவர். கருப்புச்சாமி என்பவரை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து தோட்டத்துக்காரர். கடந்த 2022 ஆம் தேதி 7வது மாதம் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. ஒரு நாள் மார்க்கம்பட்டி – ஒட்டன்சத்திரம் ரோட்டில் பாலமுருகன் கோவில் சுமார் 40 வருடங்களாக இருந்து வருகிறது. மேற்படி கோவிலின் உண்டியல் சம்பவத்தன்று காணாமல் போயிவிட்டது. தங்கசாமி என்பவர் மேற்படி கோவிலில் பூசாரியாக இருந்து வருகிறார். அவர் பாலசுப்பிரமணி கோவிலில் உண்டியல் திருடு போனது சம்பந்தமாக ஊர் தலைவர் பழனிவேல் என்பவருக்கு தகவல் சொன்னார். பின்னர் ஊர் தலைவரும் நானும் மேற்படி கோவிலுக்கு சென்று பார்த்தபோது உண்டியல் காணாமல் போயிருந்தது. மேற்படி உண்டியலில் சுமார் 1000 ரூபாய் இருந்து இருக்கும். மேற்படி உண்டியல் காணாமல் போனது சம்பந்தமாக ஊர் தலைவரும் தங்கசாமியும் இடையகோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்னை போலீசார் எங்கு வைத்து, எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் 27.07.2022 ஆம் தேதி அன்று பாலமுருகன் கோவிலில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள். அதன்பிறகு போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். பாலமுருகன் கோவில் மிகவும் சக்தி வாய்ந்த கோவில் அதனால் நிறைய மக்கள் வருவார் என்றால் சரிதான். திருடு போன உண்டியலில் எவ்வளவு ரூபாய் இருந்தது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது, ஒரு ஆயிரம் ரூபாய் இருந்து இருக்கலம். இந்த உண்டியலை திருடி சென்றது யாரென்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து கோவில் பூசாரியான தங்கசாமி என்பவர் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த பின்னர் ஒரு வாரம் கழித்து தான் போலீசாரிடம் புகார் அளித்தோம் என்றால் சரியல்ல, சம்பவத்தன்றே (27.07.2022 ஆம் தேதி) புகார் கொடுத்துவிட்டோம். நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில், சொன்ன தேதியில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.04.10 17:52:10 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 10/04/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 221/2022

List of Witness : Lw4

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கருப்புச்சாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | அர்சுணன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 10/04/2026

(3வது எதிரி ஆஜர் இல்லை. 3வது எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1 மற்றும் 2 எதிரிகள் காணொலி மூலம் ஆஜர்ப்படுத்தப்பட்டார்கள்.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் ஜவ்வாதுப்பட்டியில் மேற்கு தோட்டத்தில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2022 ஆம் ஆண்டு 7வது மாதம் தேதி ஞாபகம் இல்லை ஒரு நாள் நானும், செல்லமுத்துவும் பாலதண்டாயுதபாணி கோவிலில் உள்ள உண்டியல் திருடு போனது சம்பந்தமாக பார்த்து கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், செல்லமுத்துவும் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தோம். **பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.ஆ.3 ல் உள்ள விவரம் என்ன என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் வரைந்துள்ள படங்களை குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் சின்னக்காம்பட்டியிலிருந்து ஐவ்வாதுபட்டி வரும் வழியில் மேற்குபுறம் அம்மன் உள்ளது. கோயில் கிழக்கு பார்த்து உள்ளது. கோயில் இரும்பு கேட் வரைபடத்தில் உள்ளது. சமயலறை செட் மற்றும் ஒரு தகர செட். அதையொட்டி வடக்கு பார்த்து ஒரு கான்கீரிட் வீடு. அதன் அருகே ஒரு மரம். அதன் அருகே ஒரு சின்ன கட்டிடம். கோவிலுக்கு இரண்டு வாசல்கள். இவை அனைத்தும் வரைபடத்தில் உள்ளது. இதை தவிர்த்து வரைபடத்தில் வேறு எதுவும் உள்ளதா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. எந்த குற்ற எண் கொண்ட வழக்கிற்காக பார்வை மகசரில் கையொப்பம் செய்தேன் என்றால் உண்டியல் திருடு போன வழக்கிற்கு கையொப்பம் செய்தேன். வரைபடம் தயாரிக்கும் போது நான் அருகில் தான் இருந்தேன். நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல, சம்பவ இடத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.04.10 17:52:16 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 10/04/2026